மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.125/2021

வாக்குமூலம்: பி.வா.சா.1 சென்னித்துரை

18.09.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:– உங்கள் தரப்பில் தாவா சொத்து சம்பந்தப்பட்ட புல வரைபடம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் வடபக்கம் ஒரு பாதை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாதை 20 அடி அகலத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த பாதை வழியாக வாதி டி.கே.என்.புதூரிலிருந்து கலிக்கநாயக்கன்பட்டி சாலையை அடைகிறார் என்றால் அது தவறு. மேற்கு ஆயக்குடி கிராமத்தை சேர்ந்த உங்கள் தரப்பை சார்ந்த நபர்களின் சொத்துக்களின் சிட்டா உங்கள் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். பட்டா எண்.2226ல் உங்களுக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்களின் சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் உங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பூர்வீகமாக பாத்தியப்பட்டது. கடந்த 21.12.2010ம் தேதி உங்கள் தகப்பனார் மேற்படி சொத்துக்களை உங்களுக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் நீங்கள் எதிர்கோரிக்கையில் சொல்லியுள்ள பாதை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு பாதை இருந்திருந்தால் உங்களுடைய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் குறிப்பிட்டு எழுதியிருப்பார்கள் என்றும், அவ்வாறு பாதை ஏதும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்.41, 54, 51 ஆகியவற்றில் பொதுப்பாதை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த பாதை வழியாகத்தான் நீங்களும் மற்ற பிரதிவாதிகளும் சொத்துக்களை அனுபவித்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எதிர்கோரிக்கையில் உங்கள் சொத்துக்களுக்கு வேறு பாதை இல்லை என்றும், எதிர்க்கோரிக்கையில் கோரியுள்ள பாதை மட்டும்தான் உள்ளது என கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் சொன்னவாறு பாதையை வாதி மறித்திருந்தால் அதற்கு மேற்கு பக்கம் உள்ள காளியம்மாள் வகையறாதான் பிரச்சனை செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல, நான் பாதிக்கப்பட்டுள்ளதால் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன். உங்களுக்கு தனியாக வேறு பாதை உள்ளது என்றும், வேண்டுமென்றே வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வாதி வேலி அமைப்பதை தடுத்து பிரச்சனை செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள்

ஆவணங்களை தாக்கல் செய்தால் சொத்துக்கு வேறு பாதை உள்ள விபரம் தெரியும் என்பதால் அதை வேண்டுமென்றே மறைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் தரப்பில் முன்வைத்துள்ள எதிர்கோரிக்கை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், வாதிகளுக்கு அவர்கள் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R. KARTHIKEYAN

Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.09.18 16:42:50 +0530

District Munsif,
Palani.